செய்தி வெளியீடு எண் : 305 நாள் : 14.02.2023

**மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களை கஜகஸ்தானில் நடைபெற்ற 10–வது ஆசிய உள்ளரங்க தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் பதக்கங்கள் வென்ற வீரர், வீராங்கனைகள் இன்று சந்தித்து வாழ்த்து பெற்றனர்.**

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களை இன்று (14.02.2023) சென்னை, ஆழ்வார்பேட்டை முகாம் அலுவலகத்தில், கஜகஸ்தானில் நடைபெற்ற 10–வது ஆசிய உள்ளரங்க தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் பதக்கங்கள் வென்ற 4 வீரர், வீராங்கனைகள் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

10–வது ஆசிய உள்ளரங்க தடகள சாம்பியன்ஷிப் போட்டி கஜகஸ்தானில் 10.02.2023 முதல் 12.02.2023 வரை நடைபெற்றது. இந்தப் போட்டியில் இந்தியா சார்பில் பங்கேற்ற தமிழ்நாட்டைச் சார்ந்த ஜெஸ்வின் நீளம் தாண்டுதலில் வெள்ளிப் பதக்கமும், பிரவீன் சித்திரவேல் மும்முறை தாண்டுதலில் வெள்ளிப் பதக்கமும் மற்றும் பவித்ரா மற்றும் ரோசிமீனா ஆகியோர் போல் வால்ட் போட்டியில் வெண்கலப் பதக்கங்களும் வென்றனர்.

இப்போட்டியில் பதக்கங்கள் வென்ற வீரர், வீராங்கனைகள் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களை இன்று (14.02.2023) சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு. ஜெ. மேகநாத ரெட்டி, இ.ஆ.ப., தமிழ்நாடு தடகள சங்க செயலாளர் திருமதி லதா ஆகியோர் உடனிருந்தனர்.

முன்னதாக, கஜகஸ்தானில் நடைபெற்ற 10– வது ஆசிய உள்ளரங்க தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் பதக்கங்கள் வென்று இன்று (14.02.2023) சென்னை திரும்பிய வீரர், வீராங்கனைகளுக்கு மீனம்பாக்கம் விமான நிலையத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் புதுக்கோட்டை மாவட்ட தடகள சங்கத் தலைவர் திரு.அப்துல்லா எம்.பி., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய சென்னை மண்டல முதுநிலை மேலாளர் திருமதி. சுஜாதா, மற்றும் தமிழ்நாடு தடகள சங்க இணைச் செயலாளர் திரு. மோகன் ஆகியோர் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in